## மகளிர் திட்ட களப்பணியாளர்களுக்கான சிறப்பு பயிற்சி



வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம் மூலம் 15.12.2020 மற்றும் 16.12.2020 ஆகிய இரு தினங்கள் தமிழ்நாடு மகளிர் திட்டம், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் மூலம் களப்பணியாளர்களுக்கு சிறப்பு பயிற்சி நடத்தப்பட்டது. அதில் ஊட்டச்சத்தின் முக்கியத்துவம், பெண்களுக்கு ஏற்படும் ஊட்டச்சத்து குறைபாட்டு நோய்கள், குறைந்த செலவிலான சத்துணவுகள் தயாரிக்கும் முறைகள், சரிவிகித உணவு மற்றும் பாரம்பரிய உணவுகள், சிறுதானிய உணவுகள் பற்றிய பயிற்சிகள் அளிக்கப்பட்டது. சத்துணவுத் தோட்டம் அமைக்கும் வழி முறைகள், பயிர் மற்றும் உர மேலாண்மை, இயற்கை உரங்கள் தயாரித்தல், பயிர் சுழற்சி முறை, அறுவடை போன்றவற்றை பற்றி வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் பயிற்சியளித்தனர். சிறய அளவிலான சத்துணவு தோட்டம் அமைத்தல், மாடித்தோட்டம் அமைத்தல் போன்றவை செயல்முறை விளக்கமாக அளிக்கப்பட்டது. விவசாயிகள் வேளாண் அறிவியல் நிலையத்தில் உள்ள செயல் விளக்க திடல்களை பார்வையிட்டனர். மண்புழு உரம் தயாரிக்கும் முறை, கழிவுகளை மக்கவைத்து உரம் தயாரிக்கும் முறைகள் போன்றவை எடுத்துரைக்கப்பட்டது. சத்துணவுத் தோட்டம் அமைப்பதற்கான காய்கறி விதைகள், கீரை விதைகள் மற்றும் மூலிகை செடி நாற்றுகள் அனைவருக்கும் வழங்கப்பட்டது. ஊட்டச்சத்து மற்றும் காய்கறி தோட்டம் அமைக்கும் முறைகள் பற்றிய மடிப்பிதழ்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது. இந்த சிறப்பு பயிற்சியில் மதுராந்தகம் மற்றும் உத்திரமேரூர் வட்டம் 24 மகளிர் களப் பணியாளர்கள், இவர்கள் கிராமங்களில் சத்துணவு தோட்டம் அமைத்து கிராமத்தினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளனர். முனைவர் மா.விமலாராணி, இணைப்பேராசிரியை வேளாண்மை அறிவியல் நிலையம் அவர்கள் இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்தினர்.

## கால்நடை தீவனத்தில் தாது உப்பின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு

உழவர் தினத்தை முன்னிட்டு இந்நிலையம் மூலம் தத்தெடுக்கப்பட்ட வடகால் கிராமத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த சுமார் 30 கால்நடை பயனாளிகளுக்கு தாது உப்புக்கலவை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு கால்நடை நலக்கல்வி இயக்குநர் முனைவர் ஜி. தினகர் ராஜ் அவர்கள் தலைமையேற்று கிராமிய இளைய தலைமுறையின கால்நடை வளர்ப்பில் தொழில் முனைவோராக திகழ்ந்து அதிக வேலைவாய்ப்பினை ஏற்படுத்துதல் குறித்து தலைமையுரை ஆற்றினார். மேலும் விரிவாக்கக்கல்வி



இயக்குநர் முனைவர் ந.கு.சுதீப் குமார் அவர்கள் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பில் முக்கியத்துவம் குறித்து சிறப்புரை ஆற்றினார். முனைவர் கே.ஜி. திருமுருகன் அவர்கள் இத்திட்டத்தை பற்றி விரிவாக எடுத்துரைத்தார். தாது உப்பின் முக்கியத்துவத்தை பற்றிய விரிவுரையை முனைவர் ம. அருள்பிரகாஷ் அவர்கள் எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியை இந்நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர் ப.இரா.நிஷா, அவர்கள் முன்னிலை வகித்து ஏற்பாடு செய்ய இந்நிலைய அனைத்து தொழில்நுட்ப வல்லுநர்களும் கலந்து கொண்டனர்.

## பேரிடர் கால பயிர் மேலாண்மைக்கான வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனைகள்



வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கத்தில் செயல்பட்டுவரும் மாவட்ட வானிலை பிரிவானது காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட விவசாயிகளுக்கு மாவட்ட மற்றும் வட்டாரளவிலான வானிலை முன்னறிவிப்பு மற்றும் வானிலை சார்ந்த வேளாண் தொழில்நட்ப ஆலோசனைகளை பிரதிவாரம் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வழங்கி வருகிறது. விவசாயிகள் மாவட்ட மற்றும் வட்டாரளவிலான முன்னறிவிப்பு வானிலை சார்ந்த வேளாண் துறை மற்றும் தமிழ்நாடு வேளாண் வானிலை வலையிணைப்பு இணையதளம் மற்றும் 1000 த்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பல்வேறு வாட்ஸ்ஆப் குழுக்கள் வழியாகவும் பெற்று பயனடைந்து வருகிறார்கள். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக 24.12.2020 அன்று வல்லிபுரம் கிராமத்தில் புயல் மற்றும் பெருமழை காலத்தில் விவசாயிகள் முன்கூட்டியே மேற்கொள்ளவேண்டிய பயிர், கால்நடை மற்றும் மீன்வளம் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் புயல் வரும் முன் மற்றும் புயலுக்கு பின் விவசாயிகள் வேளாண் பயிர்கள், கால்நடை மற்றும் புயலுக்கு பின் விவசாயிகள் வேளாண் பயிர்கள், கால்நடை மற்றும் மீன் பண்ணைகளில் மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. மேலும், மீன் வளர்ப்பில் வானிலையின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை வேளாண் அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் முனைவர் கி.சிவகுமார் அவர்கள் எற்படுத்தினார். இதில் 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.


மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
வேளாண்மை அறிவியல் நிலையம்
காட்டுப்பாக்கம், காட்டாங்குளத்தூர் (அஞ்சல்)
காஞ்சிபுரம் மாவட்டம் – 603 203
தொலைபேசி : 044 – 2745 2371
மின்னஞ்சல் : kvk-kattupakkam@tanuvas.org.in
இணையதளம் : www.kvkkanchipuram.com



வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம் – 603 203 நூல் அஞ்சல்

*பெறுநர்*
*திரு/திருமதி* ____________________
____________________
____________________
____________________

*அனுப்புநர்*
*பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண்மை அறிவியல் நிலையம்*
*காட்டுப்பாக்கம், காட்டாங்குளத்தூர் (அஞ்சல்), காஞ்சிபுரம் மாவட்டம் -603 203*





# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமம்
# வேளாண்மை அறிவியல் நிலையம், காஞ்சிபுரம்
# ICAR - KRISHI VIGYAN KENDRA, KANCHEEPURAM

भाकृअनुप
ICAR

# செய்தி மடல் NEWS LETTER

மலர்: 11 | அக்டோபர் – டிசம்பர் 2020 | மடல்: 4



சிறப்பாசிரியர்
**முனைவர் நி.கு. சுதீப் குமார்**
விரிவாக்கக்கல்வி இயக்குநர்

ஆசிரியர்
**முனைவர் ப. இரா. நிஷா**
பேராசிரியர் மற்றும் தலைவர்

துணை ஆசிரியர்
**முனைவர் மா.விமலாராணி**
இணைப் பேராசிரியர் (மனையியல்)

ஆசிரியர் குழு
**முனைவர் மா. சித்தார்த்**
**முனைவர் தி. செல்வராஜ்**
**முனைவர் க. தேவகி**
**முனைவர் காயத்ரி சுப்பையா**
**முனைவர் கி. சிவகுமார்**


## தூய்மை இந்தியா திட்டம் (ஸ்வச்தா பக்வாடா 2020)







வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கத்தில் 16.12.2020 முதல் 31.12.2020 வரை தூய்மை இந்தியா திட்டம் - ஸ்வச்தா பக்வாடா 2020 காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது. வேளாண்மை அறிவியல் நிலைய அலுவலர்கள் மற்றம் விவசாயிகள் சுற்றுப்புற தூய்மையை பின்பற்றும் வகையில் உறுதிமொழி எடுக்கப்பட்டது. தினமும் தூய்மை பற்றிய நிகழ்ச்சிகள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது. அலுவலக கோப்புகள் சரிபார்க்கப்பட்டது. பழைய கோப்புகள் மின்மயமாக்கப்பட்டது. அலுவலக அறைகள், மாதிரி பண்ணை மற்றும் செயல் விளக்கத் திடல்கள் தூய்மைபடுத்தப்பட்டது. தத்தெடுக்கப்பட்ட கிராமத்தில் கழிவு நீர் கால்வாய்கள், தெருக்கள், பண்ணைகள் தூய்மையாக வைத்திருக்க விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. பண்ணைக்கழிவுகள் பிரித்தெடுக்கப்பட்டு மக்கும் கழிவுகள் மக்கவைத்து உரமாக்கும் தொழில்நுட்பம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. நெகிழி கழிவுகளை பற்றிய பயிற்சிகள் மற்றும் செயல்முறை வகுப்புகள் நடத்தப்பட்டது. தத்தெடுக்கப்பட்ட கிராமத்தில் பண்ணைக் கழிவுகளிலிருந்து உரம் தயாரிக்க மண்புழுக்கள் வழங்கப்பட்டது. கண்காட்சிகள் மற்றும் இளைஞர்களுக்கு சுகாதாரம் பற்றிய பேச்சுப்போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. 28.12.2020 அன்று விவசாயிகள் தினம் கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக்கல்வி இயக்குநர் முனைவர் நி.கு.சுதீப்குமார் அவர்கள் மற்றும் கால்நடை நலக்கல்வி மைய இயக்குநர் முனைவர் ஜி தினகர்ராஜ் அவர்கள் கலந்துகொண்டு முன்னோடி விவசாயிகளுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். வீடுகளில் உள்ள கழிவுகளை மட்க வைத்து வீட்டுத் தோட்டத்திற்கு உபயோகிக்கும் முறை செயல் விளக்கம் காட்டப்பட்டது. தூய்மை இந்தியா திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் செயல்பாடுகள் எஸ்.ஆர்.எம். சமுதாய வானொலி நிலையம், காட்டாங்கொளத்தூர் மூலம் ஒளிபரப்பப்பட்டது. பண்ணைக்கழிவு மேலாண்மை முறைகள் என்னும் கட்டுரை தினமலர் நாளிதழில் வெளியிடப்பட்டது. பல்வேறு தூய்மைப் பணிகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், போட்டிகள் மற்றும் செயல்முறை விளக்கங்கள் நடத்தப்பட்டது.

## விவசாயச்சட்டம் - 2020 - விழிப்புணர்வு நிகழ்ச்சி



வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கத்தால் கடந்த 08.10.2020 அன்று, விவசாயச் சட்டம் 2020 என்பது பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை காஞ்சிபுரம் மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குநர் அவர்கள் துவக்கிவைத்தார். காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆண் விவசாயிகள் 24 பேர் மற்றும் பெண் விவசாயிகள் 19 பேரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் விவசாய சட்டம் 2020ல் கூறியுள்ள மூன்று சரத்துக்களும் விவாதிக்கப்பட்டது.

## மரம் நடும் விழா



வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 02.10.2020 அன்று மகாத்மா காந்தியின் 151வது பிறந்ததின நினைவாக மரம் நடும் விழா கொண்டாடப்பட்டது. நிலையத்திலுள்ள மாதிரி சத்துணவு பண்ணையில் பப்பாளி, வாழை, அகத்தி, முருங்கை போன்ற மரக்கன்றுகள் நிலைய விஞ்ஞானிகள் நட்டனர். அதே தினத்தில் பொத்தேரியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் மா, வாழை, முருங்கை, பப்பாளி, அகத்தி போன்ற மரக்கன்றுகளை நட்டனர். இதில் அங்கன்வாடி பணியாளர்கள், அலுவலர்கள் கலந்துகொண்டார். மேலும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை முனைவர் மா.விமலாராணி இணைப்பேராசிரியை அவர்கள் மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியில் 34 அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் 5 வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் கலந்துகொண்டனர்.

## உலக முட்டை தினம் - 2020




உலக முட்டை தினம் 2020 முன்னிட்டு, பொத்தேரி அங்கன்வாடி மையத்தில் 9.10.2020 அன்று விழிப்புணர்வு பயிற்சியினை ஏற்பாடு செய்தது. இந்நிகழ்ச்சியில் முட்டை நுகர்வின் முக்கியத்துவம் குறித்து அங்கன்வாடி மைய ஊழியர்கள், அங்கன்வாடி மைய குழந்தைகள் மற்றும் அவர்களடைய பெற்றோரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. ஆரோக்கிய வாழ்விற்கு கோழி முட்டைகளின் முக்கியத்துவம் குறித்து முனைவர் ப.இரா.நிஷா, பேராசிரியர் மற்றும் தலைவர் மற்றும் முனைவர் மா.சித்தார்த், பேராசிரியர், வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தனர். முனைவர் மா.விமலாராணி, இணைப்பேராசிரியர், அவர்கள் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு முட்டை உணவின் ஊட்டச்சத்துக்களின் முக்கியத்துவம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மேலும், இந்நிலைய உதவிப் பேராசிரியர் முனைவர் க. தேவகி அவரகள் பல்வேறு முட்டை வகைகள் மற்றும் அவற்றின் ஊட்டச்சத்துக்கள் மற்றும் உடல் ஆரோக்கியம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். மேலும் முனைவர் ம. அருள் பிரகாஷ், உதவிப்பேராசிரியர்,வேளாண் தகவல் தொழில்நுட்ப மையம் அவர்கள் பல்வேறு முட்டை உணவுகளின் நன்மைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் குழந்தைகள் மற்றும் பெற்றோர்களிடையே ஊட்டச்சத்தின் முக்கியத்துவம் குறித்து சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் பல்வேறு முட்டை வகைகள் காட்சிக்கு வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட குழந்தைகள் அனைவருக்கும் வேகவைத்த முட்டை, சிறுதானிய கட்டிகள் மற்றும் கடலை மிட்டாய் இலவசமாக வழங்கப்பட்டது. முட்டை ஒரு சரிவிகித ஊட்டச்சத்து மிகுந்த உணவு குறித்த துண்டு பிரசுரம் அனைவருக்கும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 15 குழந்தைகள் 24 பெற்றோர்கள் மற்றும் 23 அங்கன்வாடி மைய ஊழியர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

## பண்ணை மகளிர் தின விழா 2020





வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம் மூலம் 15.12.2020 அன்று பண்ணை மகளிர் தின விழாவை நிலையத்தில் கொண்டாடியது. இந்நிலையத்தில் முன்னோடி பண்ணை மகளிர் மற்றும் தொழில் முனைவோரை கௌரவிக்கும் வகையில் 10 மகளிர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டது. முனைவர் ப.இரா.நிஷா, பேராசிரியர் மற்றும் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு பண்ணை மகளிருக்காக வேளாண்மை அறிவியல் நிலையத்தில் அளிக்கப்படும் தொழில்நட்பங்கள், வேலைப்பளுவை குறைக்கும் கருவிகளின் பயன்பாடுகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். முனைவர்.மா.விமலாராணி, இணைப்பேராசிரியை அவர்கள் மகளிருக்கான ஊட்டச்சத்துக்கள், வீட்டுக்காய்கறி தோட்டம் அமைத்தல், ஊட்டச்சத்து கறைபாட்டு நோய்களை தவிர்க்கும் வழி முறைகள் ஆகியவை பற்றி விளக்கினார். நிகழ்ச்சியில் வீட்டு காய்கறித்தோட்டம் அமைப்பதற்கான காய்கறி, கீரை விதைகள் வழங்க்ப்பட்டது. பண்ணை மகளிரின் அனுபவங்கள் மற்றும் கருத்துக்கள் பரிமாறப்பட்டது. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமம் மூலம் காணொலி காட்சி பண்ணை மகளிருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சியில் 34 பண்ணை மகளிர் கலந்துகொண்டு பயனடைந்தனர். வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## உலக மீன் வள தினம் - 2020



வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம் மூலம் உலக மீன்வள தினம் 21.11.2020 அன்று செங்கல்பட்டில் விழிப்புணர்வு நிகழ்வாக கொண்டாடப்பட்டது. இந்த விழிப்புணர்வு நிகழ்வு மீன் வளர்ப்பு மற்றும் மீன் கழிவுகளை பயன்படுத்தி மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு என்ற தலைப்பில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வின் போது உலக மீன்வள தினத்தின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. மேலும் உள்நாட்டு மீன் வளர்ப்பு முறைகள் மீன் குஞ்சு உற்பத்தி, தீவன மற்றும் நோய் மேலாண்மை மற்றும் மீன் கழிவுகளின் முக்கியத்துவம், அவற்றின் மூலம் பெறப்படும் வியாபார முக்கியத்துவம் வாய்ந்த மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. தவிர தனி நபர் வருட மீன் உண்ணும் அளவு மற்றும் இந்திய அரசு நிர்ணயிக்கப்பட்ட மீன் உணவின் சத்து விபரங்கள் தெரிவிக்கப்பட்டன. இந்நிகழ்வில் மீன்வளத்துறை ஆய்வாளர் செங்கல்பட்டு திரு.ஜேக் ஜான்பெக்கர் அவர்கள் கலந்துகொண்டு மீன்வளத்துறையின் செயல்பாடுகள், திட்டங்கள் மற்றம் அரசின் மானியம் பற்றி எடுத்துரைத்தார். வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம் முனைவர் கி.சிவகுார், உதவிப் பேராசிரியர் மீன்வளம் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து தொழில்நுட்ப உரையாற்றினார். இந்நிகழ்வில் மொத்தமாக 36 பயனாளிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.





## புறவளாக விலையில்லா கறவைமாடு மற்றும் ஆடுகள் வளர்க்கும் பயிற்சிகள்



வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை செங்கல்பட்டு மாவட்டம் இணைந்து விஞ்ஞான முறையில் கறவைமாடு மற்றம் வெள்ளாடுகள் வளர்ப்பு குறித்த புற வளாக பயிற்சிகள் டிசம்பர் 2020ல் தேர்வு செய்யப்பட்ட கால்நடை பயனாளிகளுக்கு பல்வேறு கிராமங்களில் நடத்தியது. 01.12.2020 அன்று, கறவைமாடு வளர்ப்பு பயிற்சி கால்நடை பராமரிப்புத்துறை வில்லியம்பாக்கம் கிராமத்தை சார்ந்த 50 பயனாளிகளுக்கு இந்நிலையம் மூலம் வழங்கப்பட்டது. மேலும், புறவளாக வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி 08.12.2020, 09.12.2020, 26.12.2020, 30.12.2020 மற்றும் 31.12.2020ல் புதுப்பட்டினம், சட்ராஸ், பெரியவெப்பேடு, பெருந்தண்டலம், மாம்பாக்கம், பட்டிக்காடு, வல்லம், வேங்கடமங்கலம், சிறுதாவூர், செம்பாக்கம், தண்டலம், தத்தலூர், சூராடிமங்கலம், சோகண்டி, தாழம்பேடு, திருமணி மற்றும் சாலூர் கிராமங்களில் நடத்தப்பட்டது. இப்பயிற்சிகளில் இந்நிலைய பேராசிரியர் மற்றம் தலைவர் முனைவர் ப.இரா.நிஷா, உதவிப்பேராசிரியர் முனைவர் க. தேவகி வேளாண்மை அறிவியல் நிலையம் காட்டுப்பாக்கம், வேளாண் தொழில்நுட்ப தகவல் மையம் உதவிப் பேராசிரியர் முனைவர் ம. அருள்பிரகாஷ் மற்றம் கால்நடை உதவி மருத்துவர்கள் கலந்துகொண்டு கால்நடை வளர்ப்பு குறித்து விரிவாக எடுத்துரைத்தனர். இப்பயிற்சிகளின் மூலம் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த 1456 பயனாளிகள் பயனடைந்தனர்.

## நிவார் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை விஞ்ஞானிகள் பார்வையிடல்



வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கத்தைச் சார்ந்த விஞ்ஞானிகள் செங்கல்பட்டு மாவட்டத்தில் நிவார் புயலால் பாதிக்கப்ட்ட வயல்களை கடந்த 01.12.2020 அன்று கள ஆய்வு செய்தனர். கள ஆய்வின் சம்மந்தமாக விஞ்ஞான ரீதியாக பாதிக்கப்பட்ட பயிர்களை எவ்வாறு நிர்வாகம் செய்ய வேண்டும் என்ற ஆலோசனைகளை விவசாயிகளுக்கும், வேளாண்மை துறைக்கும் வழங்கினர்.

## உலக மண்வள தினம் 2020




வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கத்தில் கடந்த 05.12.2020 அன்று உலக மண்வள தினம் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் 24 ஆண் விவசாயிகளும் 5 பெண் விவசாயிகளும் மற்றும் 4 முதுநிலை அதிகாரிகளும் கலந்து கொண்டனர். உலக மண்வள தின விழாவின் சிறப்பு விருந்தினர் முனைவர் ராதாகிருஷ்ணன் காட்டுப்பாக்கம் மையத் தீவனப் பிரிவின் பேராசிரியர் மற்றும் தலைவர் அவர்கள் விவசாயிகளுக்கு மண்வள அட்டையை வழங்கி சிறப்புரையாற்றினார்.

## அங்கன்வாடி பணியாளர்களுக்கான சிறப்பு புறவளாகப் பயிற்சிகள்



வேளாண்மை அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம் மூலம் அங்கன்வாடி பணியாளர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் 18.11.2020 மற்றும் 07.12.2020 ஆகிய இரு தினங்கள் அனுமந்தபுரம் மற்றும் காட்டாங்கொளத்தூர் கிராமங்களில் நடைபெற்றது. பயிற்சியில் கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் கலந்து கொண்டனர். தாய்ப்பாலின் முக்கியத்துவம், இணை உணவுகள், தாய்மார்களக்கான சத்துணவு வழிகாட்டி, உடல் நலக்குறைவான நேரத்தில் குழந்தைகளுக்கு தரும் சத்துணவு மற்றும் குறைந்த செலவிலான சத்துணவுகள் தயாரித்தல் ஆகிய தலைப்புகளில் கருத்துகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் முனைவர் மா. விமலாராணி இணைப் பேராசிரியர் கலந்துகொண்டு பயிற்சியளித்தார். காட்டாங்கொளத்தூர் வளர்ச்சி திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி. திரவியமேரி மற்றும் மேற்பார்வையாளர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர். இரு நிகழ்ச்சிகளிலும் 101 அங்கன்வாடி பணியாளர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.